01.02.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 50% விவசாயிகள்



"மத்திய அரசின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் அடுத்த 2 ஆண்டுகளில் 50 சதவீத விவசாயிகளை சேர்க்க வேண்டும்; இந்த இலக்கை 2 ஆண்டுகளில் அடைவதற்கு உறுதியேற்க வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதுதொடர்பாக நாட்டு மக்களுக்கு அவர் "மனதின் குரல்' (மன் கீ பாத்) வானொலி நிகழ்ச்சியின் மூலம் ஞாயிற்றுக்கிழமை ஆற்றிய உரை:

நமது நாட்டில், விவசாயிகளின் பெயரில் பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதுதொடர்பான விவாதத்துக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால், விவசாயிகள் முக்கியப் பிரச்னையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இயற்கைப் பேரிடரின்போது, அவர்களின் ஒட்டுமொத்த உழைப்பும் வீணாகி விடுகிறது. அவர்களின் ஓராண்டு உழைப்பும் வீணாகிறது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கருதியபோது, எனக்கு ஒன்றே ஒன்றுதான் நினைவுக்கு வந்தது. அதுவே, பயிர்க் காப்பீட்டுத் திட்டம்.

2016ஆம் ஆண்டில், விவசாயிகளுக்கு பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என்ற மிகப் பெரிய பரிசை மத்திய அரசு கொடுத்துள்ளது. அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம், அது புகழப்பட வேண்டும் என்றோ அல்லது பிரதமரை மக்கள் வரவேற்க வேண்டும் என்பதற்கோ அல்ல.

பயிர்க் காப்பீடு தொடர்பாக பல ஆண்டுகளாக பேசப்பட்டு வந்தது. ஆனால், அத்தகைய திட்டங்களால் நாட்டில் உள்ள 20 முதல் 25 சதவீத விவசாயிகள் கூட பயனடைந்தது கிடையாது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில், அடுத்த 2 ஆண்டுகளில் குறைந்தது 50 சதவீத விவசாயிகளை இணைப்போம் என்று நாம் உறுதி ஏற்போமா? இதற்கு உங்களின் உதவி எனக்குத் தேவை. ஏனெனில், இந்தத் திட்டத்தில் விவசாயி சேரும்பட்சத்தில், இயற்கைப் பேரிடரின்போது அவருக்கு பெரிய அளவில் உதவி கிடைக்கும்.

முன்பு போல அல்லாமல், இந்த முறை மத்திய அரசின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துள்ளது. இதற்கு இந்த திட்டம் விரிவானதாகவும், எளிமை மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடு கொண்டதாகவும் இருப்பதுவே காரணம் ஆகும். இந்த திட்டத்தின் சிறப்பு, இது மட்டுமல்ல. இதில் சேரும் விவசாயிகளுக்கு, அறுவடைக்குப் பிறகு 15 நாள்கள் கழித்து பயிர்களுக்கு எது நிகழ்ந்தாலும், அதற்கும் நிச்சயம் இழப்பீடு கிடைக்கும். இந்த திட்டத்தில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால், இழப்பு குறித்த மதிப்பீடு, இழப்பீட்டுத் தொகை விநியோகம் ஆகிய பணிகள் விரைந்து முடிப்பது உறுதி செய்யப்படும்.

அதேபோன்று, காப்பீட்டுத் திட்டத்துக்கு செலுத்த வேண்டிய மாதாந்திர பிரீமியம் தொகையும் மிகவும் குறைவாகும். கரீப் பருவத்துக்கு 2 சதவீதமும், ரபி பருவத்துக்கு ஒன்றரை சதவீதமும் ப்ரீமியம் தொகை செலுத்தினால் போதும்.

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம்: நாடு முழுவதும் கடந்த 16ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்ட "ஸ்டார்ட் அப் இந்தியா' திட்டம் இளைஞர்களுக்கு புதிய சக்தியை அளித்திருக்கிறது. முன்பு புதியன தொடக்கம் என்பது, தகவல் தொழில்நுட்ப துறையில்தான் சாத்தியம் என்ற தவறான புரிதல் இருந்தது. ஆனால் தற்போது, இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயம் உள்பட அனைத்துத் துறைகளிலும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்பது தெளிவாகி விட்டது.

ஹரியாணாவில் மத்திய அரசால் தொடக்கி வைக்கப்பட்ட "பெண் குழந்தைகளை காப்பாற்றுவோம்; பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்' திட்டத்தால் சமூகத்தில் உண்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெண் குழந்தைகளைக் கொல்லும் சம்பவம் நடைபெற்ற அந்த மாநிலத்தில், பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் தற்போது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது என்றார் நரேந்திர மோடி.

சுமார் 30 நிமிட வானொலி உரையில், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருத்தல், அழகுபடுத்துதல் குறித்தும், மறைந்த தலைவர்களின் சிலைகளை சுத்தமாகப் பராமரித்தல், அஸ்ஸôம் மாநிலம், குவாஹாட்டியில் விரைவில் நடைபெறவுள்ள தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி, 10 மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்வுகள் குறித்தும் பேசினார்.

தனது வானொலி உரையைக் கேட்க வேண்டுமெனில், 81908 81908 என்ற செல்லிடப் பேசி எண்ணுக்கு செல்லிடப் பேசியில் இருந்து "மிஸ்டு கால்' கொடுத்தால் கேட்கலாம் என்றார் மோடி.

## சிறுதானிய நொறுவைகள் தயாரிப்பில் ஜொலிக்கும் மகளிர் குழு!

சிறுதானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் நொறுவைகள் தயாரிப்பில் ஜொலிக்கிறது தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த அமுதம் மகளிர் குழு.

மாநிலம் முழுவதும் நடைபெறும் பல்வேறு உணவு தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளில் இந்த நொறுவைகளைக் காண முடியும்.

தருமபுரி மாவட்டம் மூக்கனஅள்ளி கிராமத்தில் கடந்த ஓராண்டாகச் செயல்பட்டு வருகிறது, அமுதம் சிறுதானிய மதிப்புக்கூட்டுத் தொழில் குழு. 20 பேரைக் கொண்ட இந்தக் குழுவினர் தொடக்கத்தில் பாப்பாரப்பட்டியிலுள்ள வேளாண் பயிற்சி நிலையத்தின் உதவியால் பல்வேறு பயிற்சிகளை முடித்திருக்கின்றனர். அதன் தொடர்ச்சியாக தமிழக அரசின் புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இந்தக் குழுவுக்கு ரூ. ஒரு லட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியைக் கொண்டு, பிஸ்கெட் தயாரிக்கும் பெரிய அளவிலான "ஓவன்', மாவு அரைக்கும் இயந்திரம் மற்றும் உமி- கல் நீக்கும் இயந்திரங்களை வாங்கியுள்ளனர்.

கோதுமை மற்றும் சாமை, திணை, வரகு உள்ளிட்ட சிறுதானியங்களில் ஒன்றை சம அளவில் கலந்து தயாரிக்கப்படும் 9 வகையான பிஸ்கெட்டுகளும், திணை மற்றும் சாமை லட்டு, அனைத்து சிறுதானியங்களும் கலந்த சத்து மாவு மற்றும் அடை மிக்ஸ், முறுக்குகள், சீவல்கள் என அமுதம் தயாரிப்பின் பட்டியல் நீள்கிறது. வெறுமனே தயாரிப்புகளுக்கு உதவுவதுடன் மட்டுமல்லாது, அந்தத் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளையும் இணைத்தே வழங்கும் புது வாழ்வுத் திட்டம் இவர்களின் உழைப்புக்கு உரிய லாபத்தையும் தருவதாகக் கூறுகிறார் அமுதம் குழுவின் பொறுப்பாளர் ஆர். சங்கீதா.

அவர் மேலும் கூறியது:

தொடக்கத்தில் 20 பெண்களை மட்டுமே கொண்ட குழுவாக அமைத்திருந்தாலும், தற்போது நிறைய பெண்கள் ஆர்வமுடன் முன்வருவதால் எண்ணிக்கையை உயர்த்த முடிவு செய்திருக்கிறோம். அரசு அலுவலர்களின் உதவியுடன் அமுதம் சிறுதானிய நொறுவைகளை "பிராண்டட்' உணவுப் பொருட்களாக மாற்றுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

லட்டு தயாரிக்கும்போது தரத்தில் சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே தரமான நெய்யை கிராமங்களில் மாடு வளர்த்து நெய் உருக்கித் தருவோரிடமே வாங்குகிறோம். இனிப்புகளில் வெள்ளைச் சர்க்கரை சேர்ப்பதில்லை. இதற்காகவே பனைவெல்லத்தை கூடுதல் செலவாயினும் வாங்கிச் சேர்க்கிறோம்.

நல்ல பொருள் என்பதால், சில நாட்களிலேயே கெட்டுப் போய்விடும் என்பதும் எங்களிடமுள்ள சிக்கல். அதற்காக சில ரசாயனங்களைச் சேர்க்கலாமே? எனப் பலரும் தெரிவித்தும் அதை நாங்கள் ஏற்பதில்லை என்கிறார் சங்கீதா.

## பெனுகொண்டாபுரம் ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தல்

மத்தூர் அருகே உள்ள பெனுகொண்டாபுரம் ஏரியில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கொடமாண்டப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த விவசாயிகள் வலியுறுத்தினர்.

தண்ணீர் இல்லாததால் நெற்பயிர்கள் கருகும் சூழல் உள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். பெனுகொண்டாபுரம் ஏரி நிரம்பி இரண்டு மாதம் காலம் கடந்தும் இதுவரை பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த நிலையில், கால்வாய் வழியாக வெளியேறும் நீரைப் பயன்படுத்தி அந்தப் பகுதி விவசாயிகள் சுமார் 200 ஏக்கரில் நெல் நடவு செய்துள்ளனர். தற்போது தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால், 25 ஏக்கரில் நடவு செய்துள்ள நெல் பயிர்கள் கருகி வருகின்றன.

இதுகுறித்து பொதுப் பணித் துறை அதிகாரிகளிடம் கூறியும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது விவசாயிகளின் குற்றச்சாட்டு. ஏரியில் இருந்து பிரதான கால்வாய் வழியாக தண்ணீர் திறப்பது தொடர்பாக பொதுப் பணித் துறை சார்பில் இரண்டு முறை விவசாயிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் வருகிற பிப்.12-ஆம் தேதி ஏரியில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதாக விவசாயிகள் கூட்டத்தில் பொதுப்பணித் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனராம். எனினும், அதற்கு முன்னதாகவே தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்மூலம், தற்போது தண்ணீர் இல்லாமல் கருகும் நிலையில் உள்ள 25 ஏக்கரில் நடவு செய்யப்பட்டிருந்த நெல் பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்கிறார்

மத்தூர் ஒன்றிய விவசாயச் சங்க செயலர் எஸ்.ஆர்.ரவிந்தராசு. இதுகுறித்து பொதுப்பணித் துறை பொறியாளர் செல்வக்குமாரி கூறியது:

விவசாயிகளின் நலன் கருதி அண்மையில் கூட்டம் நடத்துப்பட்டது.இதேபோல, விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, ஏரியில் 17 அடி தண்ணீர் இருப்பதால் பிப்.12-ஆம் தேதியிலிருந்து முதல் போக சாகுபடிக்கு அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தும் வகையில் கடைமடை வரை முழுமையாக தண்ணீர் சென்றடைய ஏரியின் பிரதான கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கப்படும் என்றும், மேலும் கசிவு நீர் மூலம் நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் நெற்பயிர்கள் கருகி விடாமலும், தண்ணீர் செல்லாமல் அடைத்துள்ள கால்வாய்கள் தூர்வாரப்படும் என்றார்.

## கொங்கணாபுரத்தில் ரூ.4.25 கோடிக்கு பருத்தி ஏலம்

கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 20 ஆயிரத்து 80 பருத்தி மூட்டைகள் ரூ.4.25 கோடிக்கு ஏலம் மூலம் விற்பனையானது.

கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சனிக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெறும். பருத்தி அதிகமாக உள்ள நாள்களில் ஞாயிற்றுக்கிழமையும் பருத்தி ஏலம் நடைபெறம். அதேபோல கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெற்றது. டி.சி.எச். ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ.5,540 முதல் ரூ.6,350 வரையும், பி.டி. ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 4,690 முதல் ரூ.5,430 வரையும் விற்பனையானது. மொத்தம் 20ஆயிரத்து 80 பருத்தி மூட்டைகள் ரூ.4 கோடியே 25 லட்சத்து 11 ஆயிரத்துக்கு விற்பனையானது.

## கல்லாறு ஓடையின் குறுக்கே ரூ.1 கோடியில் தடுப்பணை

அரியலூர் மாவட்டம்,அரியலூர் வருவாய் வட்டம் சிறுவளூர் கிராமத்திலுள்ள கல்லாறு ஓடையின் குறுக்கே ரூ.1 கோடியில் தடுப்பணை கட்ட தமிழக அரசு கடந்த 25 ஆம் தேதி அனுமதி வழங்கி உத்தரவிட்டது.

இந்தத் தடுப்பணையானது சுமார் 3 சதுர மைல் கொள்ளளவிற்கு வெள்ளநீர் சேமித்து வைத்திடுவதற்கும், அதிகபட்சமாக 1 விநாடிக்கு 107 கனமீட்டர் வெள்ள உபரி நீரை விடுவித்து, வெளியேறும் வகையிலும், 68.50 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெறும் வகையிலும் கட்டப்பட உள்ளது.

இதற்கான பூர்வகப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

மற்றொரு தடுப்பணை அரியலூர் வட்டம், கல்லங்குறிச்சி கிராமத்தில் தாமரை ஓடையின் குறுக்கே ரூ. 73 லட்சத்தில் கட்ட பொதுப்பணித்துறை கடந்த நவம்பர் மாதம் 17 ஆம் தேதி அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தடுப்பாணையானது நிலத்தடி நீரின் மட்டத்தை உயர்த்துவதற்கும், 16.31 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையிலும் அமையப்பெற உள்ளது.

இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது என ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## குமரியில் மீன்வளத் துறை அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டம்

கல்இறால் மேலாண்மை முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மீன்வளத் துறை அதிகாரிகள் மற்றும் மீனவச் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் கன்னியாகுமரியில் நடைபெற்றது.

மாவட்ட மீன்வளத் துறை துணை இயக்குநர் ரூபர்ட் ஜோதி தலைமை வகித்தார். கடல் துறை விஞ்ஞானிகள் லாசரஸ், லிப்டன், மீன்வளத் துறை உதவி இயக்குநர்கள் சுப்பிரமணியன் (சின்னமுட்டம்), நபி

(குளச்சல்), கடலோர அமைதி மற்றும் வளர்ச்சிக் குழு இயக்குநர் கில்டஸ், மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேள குழு பிரதிநிதிகள் மற்றும் சின்னமுட்டம், இனையம், புதுக்கிராமம், பள்ளம் உள்ளிட்டப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதில் கல்இறாலை அதிகமாக உற்பத்தி செய்வது, அதை உலக சந்தையில் விற்பனை செய்வது உள்ளிட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும், மீனவர்கள் வலையில் 100 கிராம் அளவுக்கு குறைவான இறால் குஞ்சுகள் கிடைத்தால் அதை மீண்டும் கடலுக்குள் விட்டுவிடவும், இந்த மீன்களைப் பிடிக்க மீனவர்கள் பயன்படுத்தும் வலைகளில் உள்ள கண்ணியின் அளவை பெரிதாக்க வேண்டுமெனவும், இனப்பெருக்க காலங்களில் கல்இறால் தொழிலுக்குச் செல்ல தடைவிதிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மாமரங்களில் பூக்கள் உற்பத்தி: மருந்து அடிக்கும் பணி தீவிரம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த ஆண்டு, 'மா' மரங்களில் அதிக அளவில் பூக்கள் பூத்துள்ளதால் விவசாயிகள் மற்றும் 'மா' குத்தகை வியாபாரிகள் மருந்து அடிக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

'மாங்கனி மாவட்டம்' என, அழைக்கப்படும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், 'மா' சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் மாம்பழங்கள் வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விளையும், 'மா' வகைகளை கொண்டு மாங்கூழ் தயாரிக்கும், 50க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாமரங்களில் பூக்கள் பூக்கும் நேரத்தில், போதிய மழை பெய்யாத காரணத்தால் பூக்கள் உற்பத்தி குறைந்து, 'மா'

உற்பத்தியும் குறைந்தது. ஆனால், இந்த ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போதிய பருவமழை பெய்ததால், ஜனவரி மாத இறுதியில் மா மரங்களில் அதிக அளவில் பூக்கள் பூத்துள்ளது. இந்த பூக்களில், 75 சதவீதம் பூக்கள் மரங்களில் இருந்து விட்டால், 'மா' மகசூல் அதிகம் கிடைக்கும் என்பதால் மாம் பூக்களை தக்க வைக்க விவசாயிகள் மற்றும் 'மா' குத்தகை வியாபாரிகள் தற்போது, 'மா' மரங்களுக்கு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## அத்திமாஞ்சேரிபேட்டை மலை பகுதியில் 20 ஆண்டுகளுக்கு பின் வாழை சாகுபடி

ஆர்.கே.பேட்டை : மலைகளுக்கு இடையே அமைந்துள்ள பகுதியில், 20 ஆண்டுகளுக்கு பின், மீண்டும் வாழை சாகுபடி தீவிரமடைந்துள்ளது.

ஆர்.கே.பேட்டை அடுத்த, அத்திமாஞ்சேரிபேட்டை மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்கள், நான்கு திசைகளிலும் மலைகளால் சூழப்பட்டுள்ளன. நீர்வளம் நிறைந்த இந்த பகுதியில், 1995ம் ஆண்டு வரையில், வாழை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சுற்றுப்பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள், இங்கு வந்து வாழை தார்களை கொள்முதல் செய்து வந்தனர்.பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை, புத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு, அத்திமாஞ்சேரிபேட்டை வழியாக பேருந்துகள் செல்கின்றன. இவ்வழியாக செல்லும் பேருந்துகள், அத்திமாஞ்சேரிபேட்டை பஜார் பகுதியில் சிறிதுநேரம் நின்று செல்வது வழக்கம்.

அந்த நேரத்தில், சிறு வியாபாரிகள், பேருந்து பயணிகளிடம் வாழை சீப்புகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதும் வழக்கம். தற்போது, நீர்நிலைகள் நிரம்பியுள்ளதால், இந்த பகுதியில், மீண்டும் வாழை சாகுபடி தீவிரமடைந்துள்ளது. பேருந்து நிறுத்தத்தில், சிறு வியாபாரிகள் தங்களின் வியாபாரத்தை துவக்கியுள்ளனர். ஒரு சீப்பு மஞ்சள் வாழைப்பழம், 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## 'சிறு தானியத்தில் அதிக லாபம் பெறுங்கள்'

திருவள்ளூர் : 'சிறு தானிய உற்பத்தியில், விவசாயிகள் ஈடுபட்டு அதிக லாபம் பெறலாம்' என, மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி பேசினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.ஆட்சியர் சுந்தரவல்லி தலைமை வகித்து பேசியதாவது: திருவள்ளூர் மாவட்டத்தில், சிறு தானிய சாகுபடியை அதிக அளவில் செய்து, லாபம் பெறுவதுடன், சிறு தானிய சாகுபடியில் முதன்மை மாவட்டமாக மாற்ற விவசாயிகள் முன்வர வேண்டும்.எட்டு வட்டங்களில் செயல்பட்டு வரும் இ-சேவை மையங்களுக்கு, விவசாயிகள் நேரடியாக சென்று, பட்டா, சிட்டா, வருமான சான்று ஆகியவற்றை பெறலாம். எதிர் வரும் கோடை காலத்திற்கு பயன்படும் வகையில், தர்பூசணி பயிரிட தேவையான விதைகளை வழங்க வேளாண் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விடுபட்டு போன கரும்பு, சவுக்கு பயிர்களுக்கு நிவாரண தொகை கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, திருவள்ளூர் துணை ஆட்சியர் ராகுல்நாத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ஈளாடா தடுப்பணையில் போதிய தண்ணீர் வறட்சி அதிகரித்தால் பிரச்னை இல்லை

கோத்தகிரி: கோத்தகிரி ஈளாடா தடுப்பணையில் தண்ணீர் நிறைந்து காணப்படுவதால், வறட்சி நாட்களில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்காது என, எதிர்பார்க்கப்படுகிறது.

கோத்தகிரி நகருக்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக ஈளாடா தடுப்பணை விளங்குகிறது. தடுப்பணையில் இருந்து குழாய்கள் மூலம் வரும் தண்ணீர், கேர்பெட்டா புதுாரில், சுத்திகரிக்கப்பட்டு, ராம்சந்த் நீரேற்று நிலையத்தில் இருந்து, சக்திமலை தொட்டிக்கு அனுப்பப்படுகிறது.

அங்கிருந்து, தாழ்வான பகுதியில் அமைந்துள்ள நகரின் பல பகுதிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது.

ஈளாடா தடுப்பணை துார்வாராமலும், அணை விரிவுப்படுத்தாமலும் இருந்த நிலையில், வறட்சி நாட்களில், நகரில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப, கடந்தாண்டு பேரூராட்சி மூலம், அணையை துார்வாரி, விரிவுப்படுத்தும் பணி நடந்தது. இதனால், அணையில் தண்ணீர் கொள்ளளவு கணிசமாக உயர்ந்துள்ளது.

இது தவிர, கோத்தகிரி ரைபிள் ரேஞ்ச் உள்ளிட்ட நீராதாரங்களிலும், வறட்சியை சமாளிக்கும் அளவுக்கு, தண்ணீர் இருப்பு உள்ளதால், நடப்பாண்டு, கோடை வெயிலில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்காது என, எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், தடுப்பணையில் விரயமாகும் தண்ணீரை, அணையை ஒட்டி, கீழ் பகுதியில் சேமிக்கும் பட்சத்தில், முழுமையான தண்ணீரை பயன்படுத்த முடியும். அளக்கரை மெகா திட்டம் முழுமை பெற்று தண்ணீர் வினியோகம் கிடைக்கும் வரை, ஈளாடா அணையில் விரயமாகும் தண்ணீரை சேமிப்பதற்கான நடவடிக்கை எடுப்பது அவசியம்.--

## நீர் பிரி முகடுப்பகுதி மேலாண்மை பயிற்சி

ஊட்டி: இந்திய மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு நிறுவனத்தின் ஊட்டி ஆராய்ச்சி மையத்தில், வனப்பகுதிகளில் நீர் பிரி முகடுப்பகுதி மேலாண்மை, குறித்த, 12 நாள் பயிற்சி, இன்று துவங்குகிறது.

இதில், கேரளா, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த, 34 உதவி வன பாதுகாவலர்கள் பங்கெடுக்கின்றனர். இப்பயிற்சியில் மண் பாதுகாப்பு கட்டமைப்பு, வடிகால் ஓடைகள் பராமரிப்பு, மழைநீர் சேமிப்பு, கசிவுநீர் கட்டமைப்பு போன்றவற்றிற்கான இடம் தேர்வு செய்தல், வடிவமைத்தல் உட்பட பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. குருத்துகுளி நஞ்சநாடு கிராமத்தில், களப்பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

## வெங்காயத்திற்கு ஊடுபயிராக கொத்தமல்லிச் செடிகள் செழிப்பு

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் வெங்காய சாகுபடி வய லில், ஊடுபயிராக கொத்தமல்லிச் செடியை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை அதிளவில் பெய்ததால் அனைத்து நீர்பிடிப்பு பகுதிகளிலும் நீர்வளம் நிறைந்து காணப்படுகிறது. இதனை பயன்படுத்தி அதிக லாபம் பெறும் நோக்கில் அதிகளவிலான விவசாயிகள் பணப்பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தக்காளி, வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள் கிலோ ரூ.100 வரை விலையேற்றம் கண்டுள்ள நிலையில் அவைகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வெங்காயச் செடிகளுக்கு மத்தியில், ஊடுபயிராக கொத்தமல்லிச் செடியை, கள்ளக்குறிச்சி பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். மொத்தம் 90 நாள் பயிரான வெங்காயச் செடிகளுடன், அதே நாளில் பயிர் செய்யக்கூடிய கொத்தமல்லிச் செடியையும் பயிரிட்டுள்ளனர். இவைகளுக்கு பராமரிப்பு செலவும் குறைவு, பூச்சி மருந்தும் அடிக்கத் தேவையில்லை. பயிரிட்ட 30 நாட்களிலிருந்தே பயன்தரத் துவங்குகிறது.

ஒரு ஏக்கருக்கு 6 முதல் 7 டன் வரை வெங்காயமும், 600 முதல் 700 கிலோ வரை கொத்தமல்லியும் மகசூல் கிடைக்கிறது. கிலோ வெங்காயம் 40 முதல் 50 ருபாய் வரையிலும், கொத்தமல்லி கிலோ ரூ.150 வரையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.

நீர்வளம் நிறைந்துள்ள இந்த சீசனில் இச்செடிகள் பூத்துக்குலுங்குவதால் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கால்நடை மருத்துவமனை தேவை: விவசாயிகள் வேண்டுகோள்

சேலம்: சேலம், ஏற்காடு அடிவாரத்தில் செட்டிச்சாவடி ஊராட்சி உள்ளது. கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக கொண்ட ஊராட்சியில், வீட்டுக்கு வீடு, பசுமாடு, ஆடு, கோழிகள் வளர்ப்பதன் மூலம், பெண்கள் வருவாய் ஈட்டி வருகின்றனர். மலை சார்ந்த, இப்பகுதியில் கடும் குளிர்

நிலவுவதுடன், விஷ பூச்சிகளின் நடமாட்டமும் காணப்படுகிறது. அத்துடன், மாநகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கு இங்குள்ளதால், மாத கணக்கில் மலைபோல, தேங்கி கிடக்கின்றன. அதிலிருந்து, ராட்சத ஈக்கள், வண்டுகள், பூச்சிகள் உருவாகி, கால்நடைகளை பாடாய் படுத்தி வருகின்றன. அதனால், அடிக்கடி உபாதைகளை சந்திக்கும் கால்நடைகள், திறனை இழந்து, நோய் பீடித்து விடுகிறது. கால்நடைகளுக்கு சிகிச்சை பெற, ஆறு கி.மீ., தொலைவில் உள்ள பெரிய கொல்லப்பட்டிக்கு செல்ல வேண்டும். கால்நடை வளர்ப்பு அதிகம் காணப்படும், கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சியிலும், கால்நடை மருத்துவமனை கிடையாது. எனவே, செட்டிசாவடியில், கால்நடை மருத்துவமனை அமைக்க, அப்பகுதி விவசாயிகள், தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். செட்டிச்சாவடி ஊராட்சி அலுவலகம் எதிரே கால்நடை மருத்துவமனை அமைக்க போதிய இடவசதி உள்ளது. அங்கு, மருத்துவமனை அமைத்தால், ஒரு கிலோ தொலைவில் உள்ள, கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி விவசாயிகளுக்கும், விமோச்சனம் கிடைக்கும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க சேலம் மாவட்ட செயலாளர் செல்வராஜ், பா.ம.க., அமைப்பு செயலாளர் பாலு ஆகியோர் கூறுகையில்,"கால்நடை மருத்துவமனை அமைக்க, பல ஆண்டுகளாக கோரி வருகிறோம். இது தொடர்பாக, மாவட்ட கலெக்டர் முதல் முதல்வர் தனிப்பிரிவு வரை மனு அனுப்பப்பட்டுள்ளது. நடவடிக்கை இல்லையெனில், கால்நடைகளுடன் போராட்டம் நடத்தப்படும்," என்றனர்.

## விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி

ராமநாதபுரம்: மண்டபம் வட்டார தெற்குவாணி வீதி கிராமத்தில் அட்மா திட்டத்தில் நிலக்கடலை விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்த பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது. மத்திய வேளாண் அமைச்சக கூடுதல் கமிஷனர் மீனா தலைமை வகித்தார். ராமநாதபுரம் வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி,

துணை இயக்குனர் உதுமான் முகைதீன், அட்மா தலைவர் சாத்தையா முன்னிலை வகித்தனர். பரமக்குடி வேளாண் அலுவலர் சீராளன், உச்சிப்புளி வேளாண் உதவி இயக்குனர் முருகன், வேளாண் அலுவலர்கள் கீதாஞ்சலி, பானுபிரகாஷ், அட்மா தொழில்நுட்ப மேலாளர் பானுமதி ஆகியோர் பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அப்துல் ஹாசீம், உதவி வேளாண் அலுவலர் செந்தில்குமரன்செய்தனர்.

*மண்டபம் வட்டாரம் வழுதூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பண்ணை கழிவு மேலாண் பயிற்சி நடந்தது. ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் சரவணன் பயிற்சி அளித்தார். ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மார்க்கெட்டில் விலை விவரம்**



100 கிலோ எடைக்கொண்ட பழைய, புது பொன்னி அரிசி நேற்று நிலவரப்படி ரூ.4800 முதல் ரூ.5200 எனவும், ராஜபோகம் ரூ.4600 முதல் ரூ.5000 எனவும், பிபிடி பொன்னி அரிசி ரூ.4,200 முதல் ரூ.4600 எனவும், டீலக்ஸ் பொன்னி ரூ.3200 முதல் ரூ.3500 எனவும், ஐ.ஆர்.20 அரிசி ரூ.3,000 முதல் ரூ.3,200 எனவும் கர்நாடகா ஸ்டீம் அரிசி ரூ.3200 முதல் ரூ.3400 எனவும், கர்நாடகா பி.பி.டி. அரிசி ரூ.4400 முதல் ரூ.4,600 எனவும், கர்நாடாக டீலக்ஸ் ரூ.3400 முதல் ரூ.3600 எனவும், பொன்னி பச்சரிசி ரூ.4,400 முதல் ரூ.4,800 எனவும், இட்லி அரிசி கிராந்தி கார் ரூ.3400 முதல் ரூ.4000 எனவும், கிட்டாகார் ரூ.3400 முதல் ரூ.3,600 எனவும், அம்பை ரூ.3,200 முதல் ரூ.3,400 எனவும், குண்டு கார் ரூ.3 ஆயிரம் எனவும் விற்கப்பட்டது.

நெல் அறுவடை தொடங்கியது

**கர்நாடக அரிசி ஆலை அதிபர்கள் தமிழகத்தில் முகாமிட்டு கொள்முதல்**



சேலம்: தமிழகம், கர்நாடகா மற்றும் ஆந்திராவில் பரவலாக நெல் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த பகுதிகளில் விளையும் நெல்லை, நெல் அரவை ஆலை அதிபர்கள் விலைக்கு வாங்கி, அதை அரிசியாக்கி தமிழகம் உள்பட பல மாநிலங்களுக்கு அரிசி மூட்டையாக அனுப்பி வருகின்றனர்.ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில்

கர்நாடகா, தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து சேலம் செவ்வாய்பேட்டை, லீ பஜாருக்கு புது அரிசி வரத்து இருக்கும். கடந்தாண்டு கர்நாடகாவில் மழை இல்லாத காரணத்தினாலும், தமிழகத்தில் மழையாலும் நெல் விளைச்சல் பாதித்தது. இதன் காரணமாக நடப்பாண்டு அரிசி வரத்து பாதியாக குறைந்துள்ளது. இதனால் அனைத்து புது அரிசிகளும், பழைய அரிசி விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து சேலம் செவ்வாய்பேட்டை மொத்த அரிசி வியாபாரிகள் கூறியதாவது: சேலம் செவ்வாய்பேட்டையில் நூற்றுக்கும் மேற்பட்ட மொத்த அரிசி வியாபாரிகள் உள்ளனர். இங்கு சாதாரண நாட்களில் தினசரி 150 முதல் 200 டன் அரிசி வரும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் முதல் மார்ச் வரை அரிசி வரத்து அதிகமாக இருக்கும். இந்த சீசனில் 250 முதல் 300 டன் அரிசி வரும். கடந்தாண்டு கர்நாடகாவில் மழை இல்லாததால், அங்கு நெல் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. தமிழகத்தில் தற்போது பல இடங்களில் நெல் அறுவடை தொடங்கியுள்ளது. இதனால் அங்குள்ள அரிசி ஆலை அதிபர்கள் ஆரணி, செய்யாறு, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், தஞ்சாவூர் உள்ளிட்ட பகுதிகளில் முகாமிட்டு, நெல்லை கொள்முதல் செய்து வருகின்றனர். இதன் காரணமாக நெல் மூட்டைக்கு ரூ.200 முதல் ரூ.300 அதிகரித்துள்ளது.

வழக்கமாக இந்த சீசனில் பழைய அரிசி விலையைவிட, புது அரிசி விலை மூட்டைக்கு ரூ.400 முதல் ரூ.500 வரை விலை குறைந்து இருக்கும். நடப்பாண்டு விற்பனைக்கு வரும் புது அரிசி, பழைய அரிசி விலைக்கே வருகின்றன. அதனால் பழைய அரிசி விலைக்கே, புது அரிசி விற்கப்படுகின்றன. வாடிக்கையாளர்களும் புது அரிசி விலை குறையும் என எதிர்பார்த்து அரிசியை வாங்காமல் உள்ளனர்.

இன்னும் மூன்று மாதங்களுக்கு இதே விலையில் தான் அரிசி விற்கும். பொங்கலுக்கு முன்பு 100 கிலோ கொண்ட பொன்னி அரிசி ரூ.4,800

முதல் ரூ.5,200க்கு விற்றது. இந்த சீசனில் புது பொன்னி அரிசி மூட்டைக்கு ரூ.400 முதல் ரூ.500 வரை குறைந்து ரூ.4,400 முதல் ரூ.4,800க்கு விற்கப்படும். நேற்று நிலவரப்படி பழைய அரிசியும், புது அரிசியும் ஒரே விலையில் விற்கப்பட்டது. இவ்வாறு அரிசி வியாபாரிகள் கூறினர்.

## இறால் தீவனம் உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல்

சென்னை, : தேர்வாய் கிராமத்தில் அமைய உள்ள இறால் தீவனம் உற்பத்தி தொழிற்சாலைக்கு காணொலி மூலம் முதல்வர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.காஞ்சிபுரம் மாவட்டம் பனையூர் கிராமம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற் பூங்கா ஆகிய இடங்களில் ரூ100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள இறால் தீவனம், மீன் தீவனம் மற்றும் இறால் குஞ்சு உற்பத்தி செய்திடும் பயோ-டெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலைகளுக்கு சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி மூலம் முதல்வர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பொதுஇடத்தில் அமைக்க வேண்டும்

சிதம்பரம், :சிதம்பரம் வட்டம் பூதங்குடி கிராம விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பொது இடத்தில் அமைத்து தர வேண்டி கடலூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர். பூதங்குடி கிராமத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் நடைபெறும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கடந்த 3 வருடங்களாக தனியார் இடத்தில் இயங்கி வந்தது. அந்த இடம் போதுமானதாக இல்லாததால் கிராம விவசாயிகள் மற்றும் சுற்று வட்டார விவசாயிகளும் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். மேலும் அந்த இடம் விவசாயிகளுக்கும், நெல் மூட்டைகளுக்கும் பாதுகாப்பற்ற இடமாக உள்ளது. கடந்த 26ம் தேதி நடந்த கிராமசபை கூட்டத்தில் கிராம மக்கள் கூடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை கிராமத்தில் உள்ள அய்யனார் கோயில் அருகே உள்ள புறம்போக்கு இடத்தில் அமைக்க வேண்டும் என முடிவு செய்தனர். எனவே, அதிகாரிகள் அந்த இடத்தை

பார்வையிட்டு பொது இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என கூறியுள்ளனர்.

நிலையத்துக்கு கொண்டு வரும் நெல் மூட்டைகள் அனைத்தையும் கொள்முதல் செய்ய வேண்டும்

• முஷ்ணம், : நிலையத்துக்கு கொண்டு வரும் நெல்லை முழுமையாக கொள்முதல் செய்ய வேண்டும் என அரசுக்கு விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். • முஷ்ணம் மற்றும் பல்வேறு பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால் கொள்முதல் நிலையங்களுக்கு அரசு குறிக்க அளவு பணமே வழங்குவதால் விவசாயிகள் எடுத்து வரும் நெல்களை அப்படியே கொள்முதல் செய்வதில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால் விவசாயிகள் நெல்லை கொண்டு வந்து நாள் கணக்கில் காத்திருக்கும் நிலை உள்ளதாக கூறுகின்றனர். இதனால் இதர பணிகள் பாதிப்பதோடு கூடுதல் செலவும் ஏற்படுகிறது. எனவே, நெல் கொள்முதல் நிலையங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை முழுமையான கொள்முதல் செய்திட வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு வலியுறுத்தியுள்ளனர். இது குறித்து கொள்முதல் நிலையங்களில் கேட்டபோது, அரசு அளிக்கும் தொகைக்கு ஏற்றவாறு விவசாயிகளிடயிருந்து கொள்முதல் செய்யப்படுவதாக தெரித்தனர்.

## ஒருகிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி

தா.பேட்டை, : தா.பேட்டை அடுத்த தேவானூர் கிராமத்தில் அட்மா திட்டத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி நடைபெற்றது. நிலக்கடலை, எள் போன்ற எண்ணெய் வித்து பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. ஊராட்சி துணை தலைவர் கனகராஜின் நிலக்கடலை சாகுபடி வயலில் உரமிடுதல், நீர்பாய்ச்சுதல், களைஎடுத்தல், ஜிப்சம் இடுதல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. அட்மா கிட்ட செயல்பாடுகள் மற்றும் பயிற்சி குறித்து வட்டரா தொழில்நுட்ப மேலாளர் வரகுணபாண்டியன் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். தேவானூர்,

தேவானூர் புதூர், செவந்தாம்பட்டி மற்றும் பெருகனூர் கிராமங்களை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண்மை துணை அலுவலர்கள் பிரசாத், சதீஸ் ஆகியோர் செய்திருந்தனர்.

**கால்நடை தீவன சந்தை அமைக்க வேண்டும்**

க.பரமக்தி, : க.பரமக்தி ஒன்றியக்கில் அரசு வழங்கிய கால்நடையை வளர்க்கும் விவசாயிகள் நலன் கருதி கால்நடைகளுக்கான தீவன சந்தை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களில் அதிக ஊராட்சிகளை கொண்ட ஒன்றிய வரிசையில் முதலிடத்தில் க.பரமத்தி ஒன்றியம் உள்ளது இதில் உள்ள அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர், கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், புஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி, உள்ளிட்ட 30 ஊராட்சிகளில் பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு தான் தொழிலாக செய்து பிழைத்து வருகின்றனர். இப்பகுதியில் மாடு, பசு, எருது, எருமை, வெள்ளாடு, செம்மறிஆடு, போன்ற கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இதற்காக பலர் தங்களது தோட்டத்தில் தீவன பயிர்களான கம்பு ஒட்டுப்புல், கினியாபுல், கொழுக்கடடைப்புல், மற்றும் பயறு வகையில் வேலிமால், குதிரைமசால், முயல்மசால், தீவன தட்டைபயிர் போன்றவை பயிரிட்டு கால்நடைகளுக்கு உணவாக கொடுத்து வருகின்றனர். தீவன பயிர்களை வளர்க்க நிலம் இல்லாத விவசாயிகள் சிலர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்து கால்நடைகளை பராமரித்து வருகின்றனர். இன்னும் சிலர் தங்களது கால்நடைகளை சாலையோரத்தில் மேயவிட்டு வளர்த்து வருகின்றனர். மாடு, பசு, எருது, எருமை, வெள்ளாடு, செம்மறிஆடு, போன்ற கால்நடைகளை தன்னிச்சையாக மேய விடும் போது தோட்டங்கள் மற்றும் பயிர்களில் புகுந்து சேதப்படுத்தும் அபாயம் உள்ளது. எனவே கால்நடைகளை

விற்பனை செய்ய சந்தைகள் இருப்பதை போன்றே கால்நடை தீவனங்களை தயாரிக்கும் விவசாயிகளிடம் தீவனங்களை பெற ஏதுவாக தீவன சந்தை அமைக்க வேண்டும் கால்நடைகளை விற்க பல்வேறு பகுதிகளில் சந்தை உள்ளன இதில் கால்நடை விற்று விவசாயிகள் பயன் பெறுகின்றனர்; அதுபோல் போதுமான நிலம் இல்லாத நிலையில் அரசு இலவச ஆடு வழங்கும் திட்டத்தில் பெறப்பட்ட கால்நடைகளை வளர்க்க தீவன சந்தை அமைக்க வேண்டும் இதன் மூலம் தரமான கால்நடைகளை உற்பத்தி செய்ய முடியும். இப்பகுதியில் தீவன சந்தை அமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர் குழந்தைவேல் மற்றும் விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மண்மாதிரி ஆய்வு செய்து விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்

கரூர், : கரூர் மாவட்டத்தில் வேளாண்மையை மேம்படுத்தும் திட்டமாக மண்மாதிரி எடுத்து பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகளுக்கு மண் மாதிரியை பரிசோதித்து விபரம் தெரிவித்தால் அதன்படி மண்ணுக்கேற்ற சாகுபடி பணிகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும். இதற்காக மண்மாதிரி ஆய்வு திட்டம் உருவாக்கப்பட்டது. கரூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 40ஆயிரம் விவசாய நிலங்களில் மாதிரி எடுத்து ஆய்வு செய்து ஒருங்கிணைந்த கையேடு வழங்க திட்டமிடப்பட்டது. இதற்காக ரூ.40 லட்சம் செலவில் நடமாடும் மண் பரிசோதனை ஆய்வுக்கூடம் வசதி ஏற்படுத்தப்பட்டது. இந்த நடமாடும் ஆய்வகத்தில் 5 விதமான உபகரணங்கள் உள்ளன. மண்ணில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களான துத்தாகம், இரும்பு, தாமிரம் மாங்கனீஷ் சத்துக்களை கண்டறிதல். மண்ணின் சுண்ணாம்புநிலை, தழைச்சத்து, கண்டறியும் வசதியும் உள்ளது. ஆய்வக ஊர்தியை கிராமங்களுக்கு நேரடியாக கொண்டு சென்று விவசாயிகள் மண்மாதிரிகளை ஆய்வு செய்து உடனடியாக மாதிரி அறிக்கைகளை அளிப்பது கரூர் மாவட்டத்தில உள்ள அனைத்து வட்டாரத்திற்கும் சென்று விவசாயிகளிடம் மண்மாதிரி பெற்று பரிசோதனை முடிவுகளைஉடனடியாக அறிவிக்கும் நோக்கில் துவக்கப்பட்ட திட்டம் மந்த கதியில்உள்ளது.சுமார் 10 ஆயிரம் விவசாயிகள் நிலத்தில் மண்மாதிரி எடுக்கப்பட்டது. ஆனால் ஆய்வு முடிவுகள் இன்னும்

பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. ஆய்வு முடிவுகள் அடங்கிய அட்டையை பயனாளிகளுக்கு விரைவில் வேளாண்துறை வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வேளாண்துறையினர் கூறுகையில், விரைவில் பரிசோதனை முடிவுகளை தெரிவிக்கும் வகையில் அட்டை வழங்கப்படும் என்றனர்.

## கல்லாற்று ஓடை குறுக்கே தடுப்பணை கட்ட அனுமதி

அரியலூர், : கல்லாற்று ஒடையின் குறுக்கே தடுப்பணை கட்ட தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளதாக கலெக்டர் சரவணவேல்ராஜ் தெரிவித்தார். அரியலூர் மாவட்டத்தில் சிறுவளூர் கிராமத்தில் கல்லாறு ஓடையின் குறுக்கே ரூ.1 கோடி மதிப்பில் தடுப்பணை கட்டுவதற்கு தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இந்த தடுப்பணையானது, சுமார் 3 சதுர மைல் கொள்ளளவிற்கு வெள்ளநீர் சேமித்து வைத்திடவும், அதிகபட்சமாக 1 விநாடிக்கு 107 கனமீட்டர் வெள்ள உபரிநீரை விடுவித்து, வெளியேறும் வகையிலும், 68.50 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெறும் வகையிலும் கட்டப்பட உள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இதேபோல் அரியலூர் வட்டத்தை சேர்ந்த கல்லங்குறிச்சி கிராமத்தில் தாமரை ஓடையின் குறுக்கே ரூ.73 லட்சம் மதிப்பில் தடுப்பணை கட்ட தமிழக அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பாணையானது நிலத்தடி நீரின் மட்டத்தை உயர்த்துவதற்கும் 16.51 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையிலும் அமையப்பெற உள்ளது. இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

## 2.27 லட்சம் டன் நெல் கொள்முதல்

தஞ்சை, : தஞ்சை அலுவலக கூட்ட அரங்கில் தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் நடப்பு சம்பா 2016ல் நெல் கொள்முதல் பருவத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அமைச்சர்கள் வைத்திலிங்கம், காமராஜ், ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு, உணவு மற்றும்

நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு முதன்மை செயலாளர் சிவதாஸ்மீனா, தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் விளக்க உரையாற்றினர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண் இயக்குனர் பாலசந்திரன் வரவேற்றார்.

கலெக்டர்கள் தஞ்சை சுப்பையன், திருவாரூர் மதிவாணன், நாகப்பட்டிணம் பழனிச்சாமி ஆகியோர் விளக்க உரையாற்றினர். உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசும்போது, கடந்த நான்கே முக்கால் ஆண்டில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு இதுவரை ரூ.376 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. நடப்பு கொள்முதல் பருவம் 2015-16ம் ஆண்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமின்றி கூட்டுறவுத்துறை, முதன்மை விவசாய கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் சம்மேளனம் மூலமாக விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று 17 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக ஈரப்பதத்தை உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது. உடனுக்குடன் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. காவிரி டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளின் தேவைக்கேற்ப கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கு மாவட்ட கலெக்டர்களுக்கு அனுமதியளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் தற்போது செயல்பட்டு வரும் 1230 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 2.27 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 300 மூட்டைகளுக்கு மேல் வைத்திருக்கும் பெருவிவசாயிகள் வசதிக்காக அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று கொள்முதல் செய்ய நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் இயக்கப்பட்டு வருகிறது. கொள்முதல் செய்யப்படும் நெல் முழுவதும் கொள்முதல் நிலையங்களிலிருந்து லாரிகள் மூலம் நவீன அரிசி ஆலைகள், தனியார் அரவை முகவர்கள், அரசு சேமிப்புக் கிடங்குகள் திறந்தவெளி சேமிப்பு நிலையங்கள், ரயில் தலைப்புகள் ஆகிய இடங்களுக்கு தினந்தோறும் இயக்கம் செய்யப்படும். வெளி

மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கு ரயில் வேகன்கள் மூலம் தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி, நாகப்பட்டிணம், திருவாரூர், நீடாமங்கலம், பேரளம் ஆகிய ரயில் தலைப்புகளிலிருந்து தினந்தோறும் நெல் இயக்கம் செய்ய முன்னேற்பாடு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகள் ஏதுமின்றி சீரான கொள்முதல் நடைபெற மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நெல் கொள்முதல் சம்பந்தமாக புகார்கள் தெரிவிக்க மாவட்ட அளவில் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகங்களில் செயல்படும் கட்டுப்பாட்டு அறைக்கு தஞ்சை 04362-236823, திருவாரூர் 04366-226899, நாகப்பட்டிணம் 04365-251353, சென்னை நிர்வாக இயக்குனர் அலுவலகம் 94451-90660, 94451-90661, 94451-90662 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கலாம் என்றார்.

## எண்ணெய் வித்துக்கள் தொழில்நுட்ப பயிற்சி

அறந்தாங்கி, : அறந்தாங்கி வேளாண் வட்டாரத்தில் அட்மா வேளாண் விரிவாக்க சீரமைப்பு கிட்டக்கின் கீம் 40 விவசாயிகள் எண்ணெய் வித்துக்கள் குறித்த தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் மாநில அளவிலான 3 நாட்கள் பயிற்சிக்கு திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு சென்று வந்தனர். இம்மையத்தில் விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சிகள் மற்றும் புதிய ரகங்கள், உர நிர்வாகம், நீர் நிர்வாகம், பூச்சி மேலாண்மை குறித்து திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் விளக்கமாக எடுத்து கூறினர். மேலும் அவற்றை செயல்விளக்கமாகவும், உண்மை மாதிரி பட விளக்க காட்சி ஆகியவைகள் மூலம் விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது. எள் பற்றிய புதிய ரகங்கள் ஆகியவற்றை பயிர் செய்யும் போது கடைப்பிடிக்கவேண்டிய முக்கிய தொழில் நுட்பங்கள், நீர் மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மை குறிக்கும் விளக்கி கூறப்பட்டது. மேலும் கிண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையக்கில் பயிர் செய்யப்பட்டுள்ள எண்ணெய் விக்கு பயிர்கள் மற்றும் வேளாண் இயந்திர கருவிகள் குறித்து செயல்விளக்கமாக விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜகுபர் அலி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ராமச்சந்திரன், கலையரசன் ஆகியோர் செய்திருந்தனர்.

## மானாவாரி நிலத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்ய உகந்தது

பழநி, : பழநி பகுதியில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகின்றன. தற்போது மழை பெய்யும் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. மழை பெய்தவுடன் விவசாயிகள் தங்கள் நிலங்களை உழவு செய்ய வேண்டும். இதனால் மண் இறுக்கம் மாறுவதுடன், மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கிறது. அடுத்து பெய்யும் மழையை கொண்டு நிலம் விதைப்பு செய்ய ஏதுவாகிறது.மேலும் அடிமண் மேல்மட்டத்திற்கு வருவதால் மண்ணில் உள்ள பூச்சிகளின் முட்டைகள், கூட்டுப்புழுக்கள் மற்றும் பூஞ்சான் வித்துகளும் அழிக்கப்படுகிறது. இதனால் அடுத்து பயிரிடப்போகும் பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறைகிறது.

களைச்செடிகளின் விதைகள் மண்ணின் மேற்பரப்பிற்கு வருவதால் சூரிய ஒளியின் வெப்பத்தால் காய்ந்து போகின்றன. எனவே களையின் தாக்குதலும் குறைகிறது. மழைக்கு முன்னரே புழுதி விதைப்பாக மக்காச்சோளம் விதைப்பவர்கள், 1 எக்டேருக்கான மக்காச்சோள விதைகளை பொட்டாசியம் டை நைட்ரஜன் பாஸ்பேட் 2% கரைசல் அல்லது சைக்கோசெல் 500 பி.பி.எம் கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து, பின், 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். இதனால் விதைகள் கெட்டுப்போகாமல் இருப்பதுடன் முளைப்பு திறனும் அதிகரிக்கும் என்று பழநி வட்டார வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தொண்டி அருகே மரக்கன்று நடும் விழா

தொண்டி, : தொண்டி அருகே நம்புதாளை ஊரட்சி ஒன்றிய உயர்நிலை பள்ளியில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முனியாண்டி தலைமை வகித்தார். ஆரம்ப பள்ளி தலைமை ஆசிரியை ஜெயந்தி முன்னிலை வகித்தார். தொண்டி இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து

கொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். சுமார் 800 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. தொண்டு நிறுவன தலைவர் சதீஷ், ஜமாலுதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## 19ஆயிரம் ஏக்கரில் ஜோதிரக நெல் உற்பத்தி கொள்முதல் செய்ய வேண்டுகோள்

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் 19 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ள ஜோதிரக (மட்ட ரகம்) நெல்லை, கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு சுமார் 62 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் செய்யப்பட்டது. நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் மாவட்டம் முழுவதும் 42 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் முழுவதும் டீலக்ஸ் பொன்னி, ஐஆர்(ஆடுதுறை) 36, ஏடிபி 45 மற்றும் ஜோதிரக நெல் விவசாயம் செய்யப்பட்டது. இதில் ஜோதிரக நெல் ஆண்டு தோறும் தொடர்ச்சியாக இப்பகுதியில் விவசாயம் செய்யப்படும்.

இளையான்குடி, சாலைக்கிராமம், காளையார்கோவில் பகுதியில் இந்த வகை நெல் அதிகமாக விளைவிக்கப்படும். தற்போது சுமார் 19 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் ஜோதிரக நெல் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. கேரளாவில் விற்பனை செய்வதற்காக இந்த நெல்லை சில ஆண்டுகள் தனியார் வியாபாரிகள் கூடுதலாக வாங்கி செல்வர். ஒவ்வொரு ஆண்டும் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்ட உடன் ஜோதிரக நெல்லை கொள்முதல் செய்யாமல் அலுவலர்கள் புறக்கணிப்பர். இதுபோல் இந்த ஆண்டும் ஜோதிரக நெல் வாங்கப்படாது என அலுவலர்கள் கூறி வருகின்றனர்.

இதனால் ஜோதிரக நெல்லை விவசாயம் செய்த ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டி கூறியதாவது,'ஆளும் கட்சியினர்

தலையீடு மற்றும் தனியார் வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும் வகையிலேயே ஆண்டுதோறும் கொள்முதல் நிலையங்களை தாமதமாக அமைக்கின்றனர்.

இந்த ஆண்டு விரைவில் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். தாமதமாக அமைப்பதால் அரசு விலையைவிட ஒரு மூடைக்கு ரூ.300வரை குறைத்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்து வியாபாரிகள் அந்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வர். ஆண்டுதோறும் ஜோதிரக நெல்லை கொள்முதல் செய்ய மறுப்பது பின்னர் விவசாயிகள் போராட்டம் நடத்தியதும் அந்த ரகத்தை கொள்முதல் செய்வது என்பது வாடிக்கையாகிவிட்டது. இதுபோன்றநடவடிக்கைகளை கைவிட்டு ஜோதிரக நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் நிலையங்களில் பலநாட்கள் விவசாயிகளை காத்திருக்க வைக்காமல் உடனடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### அடுத்த 2 ஆண்டுகளில் பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் 50 சதவீத விவசாயிகளை இணைக்கவேண்டும் வானொலியில் மோடி பேச்சு



புதுடெல்லி,

அடுத்த 2 ஆண்டுகளில் பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 50 சதவீத விவசாயிகளை இணைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார்.

பிரதமர் மோடி மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமை 'மன் கி பாத்'(மனதில் இருந்து பேசுகிறேன்) என்ற தலைப்பில் வானொலியில் உரையாற்றி வருகிறார். நேற்று அவர் ஆற்றிய உரை வருமாறு:–

<u>அடையாளச் சின்னம்</u>

இளைஞர்கள் மத்தியில் கதர் ஆடைகள் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாக இடம்பிடித்து இருப்பது பாராட்டுக்குரியது. கதர் துணியை அதிக அளவில் மக்கள் பயன்படுத்த முன்வர வேண்டும். இதன் மூலம் அபரிமிதமான வேலைவாய்ப்பை அதிகரிக்க முடியும். இந்த துறைக்கு மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் அவசியம். தற்போது சூரிய ஒளிசக்தி மூலம் விசைத்தறிகள் இயக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் விவசாயிகள் என்னும் பெயரில் ஏதேதோ கூறுகின்றனர். அந்த விவாதத்துக்குள் செல்ல நான் விரும்பவில்லை. ஆனால் இயற்கை சீரழிவுகளின்போது விவசாயிகள் பெரும் நெருக்கடியை சந்திக்கின்றனர். அவர்களை மனதில் கொண்டு வரப்பட்டதுதான் பிரதமர் பயிர்க்காப்பீட்டு திட்டம்.

<u>50 சதவீத விவசாயிகள்</u>

இத்திட்டம் அனைத்து விவசாயிகளையும் சென்றடையும் வகையில் விரிவு படுத்தப்படும். அடுத்த 2 ஆண்டுகளில் 50 சதவீத விவசாயிகளை இதில் இணைக்க நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். 15 நாட்கள் வரையிலான பயிர்கள் பாதிக்கப்பட்டால் கூட விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்கச் செய்வதை மத்திய அரசு நோக்கமாக கொண்டு உள்ளது. இன்னலுக்கு உள்ளாகும் விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீட்டு திட்டம் மட்டுமே தீர்வு அளிப்பதாக இருக்கும்.

மத்திய அரசு தொடங்கி வைத்துள்ள தொடங்கிடு இந்தியா திட்டம் மிகுந்த வரவேற்பை பெற்று உள்ளது. லட்சக்கணக்கானவர்கள் இதில் தங்களை பதிவு செய்து கொண்டு இருக்கின்றனர். ஏராளமானோர் இணையதளம் வாயிலாகவும் தொடர்பு கொண்டு உள்ளனர்.

<u>கடற்படை வலிமை</u>

2016–ம் ஆண்டுக்கான தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் விளையாட்டுப் போட்டிகள் கவுகாத்தியில் நடக்கிறது. இதேபோல் விசாகப்பட்டினத்தில் வருகிற 5–ந்தேதி முதல் 8–ந்தேதி வரை நடைபெறும் சர்வதேச கப்பற்படை கூட்டுப் பயிற்சியில் இந்திய கடற்படையின் வலிமை வெளிப்படுத்தப்படும்.

இதில் 50 நாடுகள் கலந்து கொள்வதாக உறுதி அளித்து இருக்கின்றன. இந்த கூட்டு பயிற்சி உலகின் ராணுவ பலத்துடன் நமது ராணுவ பலமும் ஒத்துழைத்து செயல்படுவதை மேம்படுத்துவதாக அமையும்.

<u>தூய்மை இந்தியா</u>

அரியானா, குஜராத் மாநில கிராமங்களில் குடும்பத்தில் படித்த மூத்த பெண்கள் தேசியக் கொடியை ஏற்றி வித்தியாசமான முறையில் குடியரசு தினத்தைக் கொண்டாடினர். பெண் குழந்தைகளை போற்றுவோம், பெண் குழந்தைகளை படிக்கவைப்போம் என்னும் முழக்கத்தை போற்றும் விதமாக இந்த மாநில அரசுகள் நடந்து கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

தூய்மை இந்தியா திட்டம் வேகம் பிடித்து வருகிறது. இதில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மாணவர்கள், தன்னார்வ தொண்டர்கள் தங்களின் பிரசாரத்தை ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களில் மேற்கொண்டு வருவது திருப்திகரமாக உள்ளது. இதேபோல் தேசத் தலைவர்களுக்கு வைக்கப்பட்டு உள்ள சிலைகளை சுத்தம் செய்ய மக்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## உழவர்சந்தையில் கடந்த மாதம் ரூ.1¼ கோடிக்கு காய்கறிகள் விற்பனை



பொள்ளாச்சி,

பொள்ளாச்சி உழவர்சந்தையில் கடந்த ஜனவரி மாதம் ரூ.1 கோடியே 46 லட்சத்து 71 ஆயிரத்து 635–க்கு காய்கறிகள், பழங்கள் விற்பனையாகி உள்ளன.

<u>உழவர்சந்தை</u>

பொள்ளாச்சியில் உழவர்சந்தை கடந்த 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இங்கு 80 கடைகள் உள்ளன. சந்தைக்கு பொள்ளாச்சியை சுற்றி உள்ள கிராமங்கள் மற்றும் ஆனைமலை, கிணத்துக்கடவு, பெதப்பம்பட்டி, சுல்தான்பேட்டை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் காய்கறிகள், பழங்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள்.

விவசாயிகள் சரக்கு வாகனங்களிலும், அரசு பஸ்களிலும் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். மேலும் இதனை தினமும் ஏராளமான பொதுமக்கள் வாங்கி செல்கிறார்கள். கடந்த ஜனவரி மாதம் 5 லட்சத்து 71 ஆயிரத்து 105 கிலோ காய்கறி, பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இவைகள் ரூ.1 கோடியே 46 லட்சத்து 71 ஆயிரத்து 635–க்கு விற்பனை செய்யப்பட்டது. 2 ஆயிரத்து 481 விவசாயிகள் தங்களது விளைபொருட்களை உழவர்சந்தை மூலம் விற்பனை செய்துள்ளனர். இவற்றை 95 ஆயிரத்து 324 பேர் வாங்கி சென்றுள்ளனர்.

<u>விற்பனை குறைவு</u>

கடந்த டிசம்பர் மாதம் ரூ.1 கோடியே 52 லட்சத்து 51 ஆயிரத்து 430–க்கு விற்பனையானது. இதை ஒப்பிட்டு பார்க்கும் போது ஜனவரி மாதம் ரூ.5¾ லட்சத்துக்கு விற்பனை குறைந்துள்ளது. இது குறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறியதாவது:–

கடந்த டிசம்பர் மாதத்தை காட்டிலும், ஜனவரி மாதம் உழவர் சந்தைக்கு காய்கறிகள், பழங்கள் வரத்து அதிகரித்து இருந்தது. ஆனால் விலை குறைவாக இருந்ததால் விற்பனை தொகை குறைந்துள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## சீசன் தொடங்க உள்ளதையொட்டி கொடைக்கானலில் பூச்செடிகள் நடவு பணிகள் தீவிரம்



கொடைக்கானல்,
சீசன் தொடங்க உள்ளதையொட்டி கொடைக்கானலில் பூச்செடிகள் நடவு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

<u>பூச்செடிகள் நடவுப்பணி</u>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் குளு, குளு சீசன் வருகிற ஏப்ரல் மாதம் தொடங்கி ஜூன் மாதம் 2–வது வாரம் வரை இருக்கும். அப்போது தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலம், வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு வருகை தருவார்கள்.

அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பிரையண்ட் பூங்கா, செட்டியார் பூங்கா ஆகியவற்றில் லட்சக்கணக்கான பூக்கள் பூத்துக்குலுங்கும். இதற்கான செடிகள் அனைத்தும் தோட்டக்கலைத்துறை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சீசன்

தொடங்குவதற்கு முன்பே நடவு செய்யப்படுகின்றன. அதன்படி இந்த ஆண்டிற்கான பூச்செடிகள் நடவுப்பணி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது.

பல வண்ணப்பூக்கள்

இது குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, 'சீசன் தொடங்குவதையொட்டி பிரையண்ட் பூங்கா, செட்டியார் பூங்கா ஆகியவற்றில் உயர்ரக பூச்செடிகளான டேரியா, ஆக்டர்டெலிபீனியம், சப்னேரியன், சுவிட்வில்லியம், ஆர்ணமண்டல் கேபேஜ், கோரியாப்சிஸ் போன்ற செடிகள் லட்சக்கணக்கில் நடவு செய்யப்பட்டு வருகின்றன. இந்த செடிகளில் இருந்து பல வண்ணங்களில் கண்ணை கவரும் வகையில் பூக்கள் பூக்கும்.

மேலும் 2 பூங்காக்களிலும் செடிகளை நடவு செய்யும் பணிகள் தற்போது இறுதிகட்டத்தை நெருங்கி உள்ளன. கொடைக்கானலில் மே மாதத்தில் தான் பூக்கள் பூப்பதற்கான கால நிலை உருவாகும். எனவே அந்த கால கட்டத்தில் பூக்கும் செடிகளாகவே நடவு செய்யப்பட்டுள்ளன. இதனை காண வரும் சுற்றுலா பயணிகள் தங்கள் கவலைகளை மறந்து மகிழ்ச்சியாக உறவினர்களுடன் சுற்றுலா தலங்களை பார்வையிடுவார்கள்' என்றனர்.

**காதலர் தினத்திற்கு தயாராகும் ஓசூர் ரோஜாக்கள் ஒரு கோடி பூக்கள் ஏற்றுமதி செய்ய விவசாயிகள் திட்டம்**



ஓசூர்,

காதலர் தினத்தை முன்னிட்டு வழக்கம் போல இந்த ஆண்டும் ஒரு கோடி ரோஜாக்களை ஓசூரில் இருந்து ஏற்றுமதி செய்திட விவசாயிகள் திட்டமிட்டு சாகுபடி செய்து உள்ளனர்.

காதலர் தினம்

உலகம் முழுவதும் வாழும் காதலர்களால் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 14–ந் தேதி காதலர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. காதலர் தினத்தில், காதலர்கள் ஒருவருக்கொருவர் பரிசுப்பொருட்கள், வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை வழங்கி அன்பை பரிமாறிக் கொள்வது வழக்கம். இதில் ரோஜாப்பூக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஓசூர் ரோஜாக்கள் உலக அளவில் புகழ் பெற்றதாகும். அங்குள்ள மண் வளம் மற்றும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை ஆகியவை காரணமாக ஓசூரில் அதிக அளவில் ரோஜாக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஓசூர் சுற்று வட்டாரத்தில் பாகலூர், குடிசெட்லு, பேரிகை, அத்திமுகம், தேன்கனிக்கோட்டை, தளி, கெலமங்கலம், சீக்கனப்பள்ளி உள்ளிட்ட

பகுதிகளில் சுமார் 500 ஏக்கருக்கும் மேல் ரோஜாப்பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

<u>வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி</u>

இதில் தாஜ்மகால், ரெட்ரோஸ், நொப்ளஸ், பர்ஸ்ட்ரெட், ஒயிட்ரோஸ்



உள்பட 40–க்கும் மேற்பட்ட ரோஜா ரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூரில் சாகுபடி செய்யப்படும் ரோஜாக்கள் வெளிநாடுகளான சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஓசூரில் இருந்து பெங்களூருவுக்கு கொண்டு செல்லப்படும் ரோஜாக்கள் அங்கிருந்து விமானம் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் சீனா, கென்யா போன்ற நாடுகள் ரோஜா மலர் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டியதின் விளைவாக, சர்வதேச சந்தையில் ஓசூர் ரோஜாக்களுக்கு போட்டி ஏற்பட்டது. இதன் காரணமாக முந்தைய ஆண்டுகளை காட்டிலும் ஏற்றுமதியும் சற்று குறைந்தது. வழக்கம் போல இந்த ஆண்டும் சர்வதேச சந்தையில் உள்ள போட்டிகளை சமாளித்து

அதிக அளவில் ரோஜாக்களை ஏற்றுமதி செய்திட ஓசூர் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

<u>விவசாயிகள் ஆயத்தம்</u>

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கடும் பனிப்பொழிவு, நோய் தாக்குதல் காரணமாக ரோஜாக்கள் மொட்டுகளாக இருந்த போதிலேயே கருகின. ஓசூர் சுற்று வட்டார பகுதிகளில் பல இடங்களில் இதே நிலை காணப்பட்டது. ஆனால் தற்போது சரியான சீதோஷ்ண நிலை உள்ளதால் வழக்கம் போல இந்த ஆண்டும் அதிக அளவில் இலக்கை எட்டிட ரோஜா விவசாயிகள் ஆயத்தமாகி வருகிறார்கள். இது குறித்து சீக்கனப்பள்ளியைச் சேர்ந்த விவசாயி பாபு கூறியதாவது:–

ஆண்டுதோறும் காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூர் சுற்று வட்டாரத்தில் இருந்து ஒரு கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்படும். அதில் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்கள், இந்தியாவின் பிற நகரங்களின் தேவைக்காக சுமார் 60 சதவீதம் ரோஜாக்கள் அனுப்பப்படுகின்றன. இதைத் தவிர வெளிநாடுகளுக்கு அதாவது 40 லட்சம் முதல் 50 லட்சம் ரோஜாக்கள் வரையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

<u>8–ந் தேதிக்கு மேல்</u>

வழக்கம் போல இந்த ஆண்டும் ரோஜாக்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்திட சாகுபடி செய்துள்ளோம். அதில் பசுமை குடில்கள் அமைக்கப்பட்டுள்ள ரோஜா மொட்டுகள் விரியாமல் இருப்பதற்காக அதற்கு உறைகள் போடப்பட்டுள்ளன. வருகிற 8–ந் தேதிக்கு மேல் அந்த ரோஜாக்கள் பறிக்கப்பட்டு எந்திரங்கள் மூலமாக அளவாக வெட்டப்பட்டு, பேக்கிங் செய்யப்படும். பிறகு அந்த ரோஜாக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிட திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்பு ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை**




பகல் வெப்பம் உயர்ந்து வருவதால், கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.

வானிலைஅறிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 3 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 4 கி.மீ.வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 93.2 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 69.8

டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 74 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 52 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்புவானிலை

பகல் வெப்பம் உயர்ந்தும், இரவு வெப்பம் சற்றே குறைந்தும் காணப்படுகின்ற இந்த இருவேறு விதமான வெப்ப அளவுகளை கொண்ட வானிலை , குளிர்காலத்தின் பின்பகுதியில் காணப்படும். இதனால் கோழிகள் பகலில் உயர்ந்து வரும் வெப்பத்திற்கும், இரவில் குளிருக்குமான வானிலையை தாங்க வேண்டிவரும். இது கோழிகளில் ஒருவிதமான அயற்சியை உண்டாக்கும். அதன் காரணமாக தீவன எடுப்பும், முட்டை உற்பத்தியும் சற்று குறையும்.

இந்த இந்த காலகட்டத்தை உன்னிப்பாக கவனித்து தீவனத்தின் ஊட்டச்சத்துக்கள் அயற்சியை தாங்க வல்ல நல்ல ஜீரணிக்ககூடிய மூலப் பொருட்களை கொண்டு தீவனம் தயாரிக்க வேண்டும். பூஞ்சையற்ற மண் மற்றும் மணல் இல்லாத ஈரம் குறைந்த தெளிவான மூலப்பொருட்களை கொண்டு தீவனம் தயாரிக்கப்பட வேண்டும்.
கடந்த வாரம் கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகளில் பெரும்பாலும் இறக்கை அழுகல், மூச்சுக்குழல் நோய் மற்றும் ஈகோலை கிருமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு, இறப்பு ஏற்பட்டு உள்ளது.
எனவே பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் தண்ணீரில் கிருமிகளின் தாக்கம உள்ளதா? என ஆய்வகத்தில் பரிசோதனை செய்து, அதற்கு ஏற்றாற்போல் தீவன மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**50 சதவீத மானியத்தில் உயர்ரக விதைகள் நீலகிரி மாவட்டத்தில் காய்கறிகள் உற்பத்தி திறன் 25 சதவீதம் அதிகரிப்பு கலெக்டர் சங்கர் தகவல்**



ஊட்டி

50 சதவீத மானியத்தில் உயர்ரக விதைகள் வழங்கப்படுவதால் நீலகிரி மாவட்டத்தில் காய்கறிகள் உற்பத்தி திறன் 25 சதவீதம் அதிகரித்து உள்ளதாக மாவட்ட கலெக்டர் சங்கர் தெரிவித்து உள்ளார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

ஊட்டி அருகே கட்டபெட்டு பகுதியில் தமிழக அரசின் மானிய உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் காளான் உற்பத்தி மையம் மற்றும் கொய்மலர் சாகுபடி செய்யும் பசுமை குடில்களை மாவட்ட கலெக்டர் சங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

தோட்டக்கலை துறை மூலம் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்காக ரூ.4 கோடியே 91 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் காய்கறிகள், வாசனை பயிர்கள்,

கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பழம் மற்றும் காய்கறி சாகுபடி செய்தல் உள்ளிட்டவை மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் பின்னேற்பு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் காளான் உற்பத்தி செய்ய ரூ.40 லட்சம் கடன் வழங்கப்பட்டு உள்ளது. இதற்கு மானியமாக ரூ.16 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

நவீன தொழில்நுட்பம்

கட்டபெட்டு பகுதியில் அமைக்கப்பட்டு உள்ள காளான் உற்பத்தி மையம் நவீன தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் காளானுக்கு தேவை அதிகமாக உள்ளது. எனவே இதன் மூலம் ஆண்டிற்கு ரூ.16 லட்சம் வருமானம் கிடைக்கும். காளான் உற்பத்தி செய்ய குறைந்த அளவிலான இடமும், தண்ணீர் வசதியும் இருந்தால் போதுமானதாகும். கொய்மலர் சாகுபடியில் ஆசியாடிக், ஒரியண்டல் என 2 வகையான பூக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆசியாடிக் மலர்கள் குறைந்த காலத்தில் பூக்கும் தன்மை கொண்டது. ஆனால் அதிகளவு லாபம் கிடைக்காது. ஒரியண்டல் பூக்கள் நறுமணம் கொண்டதோடு, நீண்ட நாட்கள் வாடாமல் இருக்கும். இந்த மலர்களுக்கு அதிக கிராக்கி உள்ளது.

இந்த மலர்கள் பெங்களூரு, மைசூரு உள்ளிட்ட இடங்களுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தரமான 3–க்கும் மேற்பட்ட மொட்டுக்கள் கொண்ட ஒரு செடிக்கு ரூ.35 முதல் ரூ.45 வரை விலை கிடைக்கிறது. கொய்மலர் சாகுடி செய்ய 40 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. நீலகிரியில் 70 லட்சம் சதுர மீட்டர் பசுமை குடில்கள் அமைக்கப்பட்டு உள்ளது. இதற்கு ரூ.3 கோடியே 26 லட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

## காய்கறி உற்பத்தி திறன் அதிகரிப்பு

நீலகிரியில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 100 சதவீத மானியத்தில் 2 ஆயிரத்து 78 ஹெக்டர் பரப்பளவிற்கு பாசன கருவிகள் வழங்கப்பட்டு உள்ளன. இதன் மூலம் காய்கறிகள் கூடுதலாக 900 ஹெக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மலைப்பகுதி

மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் உயர்ரக காய்கறி விதைகள் வழங்கப்படுவதால் நீலகிரி மாவட்டத்தில் காய்கறிகள் உற்பத்தி திறன் 25 சதவீதம் அதிகரித்து உள்ளது. நீலகிரியில் விவசாயத்தை மேம்படுத்த விவசாயிகளுக்கு மானியத்துடன் 81 பவர் டில்லர் எந்திரங்கள், 25 மினி டிராக்டர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் சிவசுப்பிரமணியம், உதவி இயக்குனர் உமா ராணி உள்ளிட்ட அரசு துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## கொங்கணாபுரம் வேளாண்மை சங்கத்தில் ரூ.4 கோடியே 40 லட்சத்திற்கு பருத்தி ஏலம்



இடைப்பாடி,

கொங்கணாபுரத்தில் உள்ள வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இடைப்பாடி, மேட்டூர், சங்ககிரி தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து

ஏலத்தில் கலந்து கொண்டார்கள். மொத்தம் 24 ஆயிரம் பருத்திமூட்டைகள் ரூ.4 கோடியே 40 லட்சத்திற்கு ஏலம் போனது. டி.சி.எச் ரக பருத்தி மூட்டைகள் ரூ.5,900 முதல் ரூ. 6,400 வரை ஏலம் பேனது. சுரபி ரக பருத்தி மூட்டைகள் ரூ.5,900 முதல் ரூ.6,400 வரை ஏலம் போனது. இதில் வெளியூர் வியாபாரிகள் பலரும் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர்.

## தஞ்சை பெரியகோவில் அருகே கல்லணைக்கால்வாயில் ரூ.1¼ கோடியில் நடைபாதை கலெக்டர் சுப்பையன் நேரில் ஆய்வு



தஞ்சை பெரியகோவில் அருகே கல்லணைக்கால்வாயில் ரூ.1¼ கோடியில் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளதை கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நடைபாதை

தஞ்சை மாநகரை அழகுபடுத்தும் வகையில் தஞ்சை இர்வீன் பாலத்தில் இருந்து நாகை செல்லும் சாலையில் உள்ள பாலம் வரை கல்லணைக்கால்வாயின் இருபுறமும் நடைபாதை அமைக்கப்பட்டு, மின் விளக்குகளும் பொருத்தப்பட்டன.

இதையடுத்து அடுத்தகட்டமாக இர்வீன் பாலத்தில் இருந்து தஞ்சை பெரிய கோவில் அருகே உள்ள பாலம் வரை கல்லணைக்கால்வாயின் இருபுறமும் நடைபாதை அமைக்கப்பட்டது. பொதுப்பணித்துறை சார்பில் ரூ.1 கோடியே 20 லட்சம் செலவில் இந்த நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

<u>கலெக்டர் ஆய்வு</u>

இதனை தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பயிற்சி கலெக்டர் தீபக் ஜேக்கப், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரேவதி, உதவி செயற்பொறியாளர் சண்முகவேல், உதவி பொறியாளர்கள் கலைச்செல்வன், கார்த்திகேயன், கலைப்பண்பாட்டுத்துறை உதவி இயக்குனர் குணசேகரன், சுற்றுலா அலுவலர் ராஜசேகரன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் சிறுதானியத்தை அதிக அளவில் பயிர் செய்து லாபம் அடையலாம் கலெக்டர் பேச்சு



திருவள்ளூர்,

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் சிறுதானியத்தை அதிக அளவில் பயிர் செய்து லாபம் அடையலாம் என்று கலெக்டர் சுந்தரவல்லி விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பேசினார்.

<u>குறை தீர் கூட்டம்</u>

திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் சுந்தரவல்லி தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கூட்டத்தை தொடங்கி வைத்து கலெக்டர் சுந்தரவல்லி கூறியதாவது:–

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் சிறுதானியத்தை அதிக அளவில் பயிர் செய்து லாபம் பெறலாம். மேலும் சிறுதானிய சாகுபடியில் திருவள்ளூர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக மாற்ற விவசாயிகள் முன்வர வேண்டும். மாவட்டத்தில் 8 இடங்களில் செயல்பட்டு வரும் இ–சேவை மையங்களுக்கு விவசாயிகள் நேரடியாக சென்று பட்டா, சிட்டா, வருமான சான்று போன்றவற்றை பெற்று பயன்படுத்தி கொள்ளலாம்.

எதிர்வரும் கோடை காலத்திற்கு பயன்படும் வகையில் தர்பூசணி பயிரிட தேவையான விதைகளை வழங்கிட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்தல், நீக்கல் மற்றும் முகவரி மாற்றம் ஆகிய வசதிகளை செய்திட நடைபெறவுள்ள சிறப்பு முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

<u>பழுதடைந்த சாலைகள்</u>

மழை வெள்ளத்தால் பழுதடைந்த சாலைகளை சீரமைத்திடவும், பூண்டி, பழவேற்காடு நீர்த்தேக்கங்களை சுற்றுலா தலமாக மாற்றவும், ராமஞ்சேரி கிராமத்தில் கரும்பு பயிர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கபட்டு தண்ணீர் தேங்கியுள்ளதால் மகசூல் வெகுவாக குறையும் என்பதால் அவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கே.முத்து, சப்–கலெக்டர் ராகுல்நாத் மற்றும் அனைத்து அரசுதுறை அலுவலர்கள் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

## உடுமலை பாரத ஸ்டேட் வங்கி கிளை சார்பில் பயிர்க்கடன் புதுப்பித்தல் முகாம்




உடுமலை,

உடுமலையை அடுத்த வாளவாடியில் பாரத ஸ்டேட் வங்கியின் உடுமலை கிளை சார்பில் விவசாய கடன் தீர்வு மற்றும் பயிர்கடன் புதுப்பித்தல் முகாம் நடைபெற்றது. முகாமில் கோவை மண்டல துணைப்பொது மேலாளர் ரமேஷ், கோவை மண்டல உதவி மேலாளர் பிரதீப் உள்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் 73 விவசாயிகள் ரூ.84 லட்சத்திற்கான பயிர்கடனை புதுப்பித்தனர். மேலும் 11 விவசாயிகளின் ரூ. 38 லட்சம் கடன் தீர்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து 3 விவசாயிகளுக்கு ரூ.28 லட்சம் மதிப்பில் புதிய டிராக்டர்களுக்கான கடன் வழங்கப்பட்டது. மேலும் வேளாண் விளைபொருள் விற்பனை கடனாக 15 விவசாயிகளுக்கு ரூ.1 கோடி வரை கடன் வழங்கப்பட்டது. இறுதியாக பாரத ஸ்டேட் வங்கி (ஏ.டி.பி. விவசாய பிரிவு) கிளையின் மேலாளர் ரங்கராஜ் நன்றி கூறினார்.